

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், காங்கேயம் வட்டம், வெள்ளகோவில் செம்மாண்டம் பாளையம் சாலை, பெரியசாமி நகர் அருகில் 10.12.2024 அன்று ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தவர்கள் மற்றும் காயமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.4.50 இலட்சத்திற்கான காசோலையினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் வழங்கினர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், வடக்கு மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ், மாநகராட்சி மேயர், வடக்கு மாநகர செயலாளர் ந.தினேஷ்குமார், துணை மேயர் ரா.பாலசுப்பிரமணியம், மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன் ஆகியோர் உள்ளனர்.



திருப்பூர் மாநகராட்சி, மண்டலம்4, கே.எம்.ஜி நகர் பகுதியில் திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி 2024–25ன் கீழ் ரூ.25.80 இலட்சம் மதிப்பீட்டில் புதிய அங்கன்வாடி மையம் மற்றும் நியாய விலை கடை கட்டிடம் கட்டுவதற்கான பணிகளை திருப்பூர் வடக்கு மாவட்டச் செயலாளர், தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் துவக்கி வைத்தார். இதில் மாநகர செயலாளர்கள் டி.கே.டி.மு.நாகராசன் ( திருப்பூர் தெற்கு), மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் (திருப்பூர் வடக்கு), துணை மேயர் ரா.பாலசுப்ரமணியம், மாவட்ட துணை செயலாளர் வழக்கறிஞர் ஜி.கே.நந்தினி, பகுதி செயலாளர் மியாமி ஆ.அய்யப்பன், வட்டக் கழக செயலாளர் மு.நந்தகோபால் உள்பட மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புக்களின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

### இனமான பேராசிரியரின் 102 வது பிறந்த இன்று முன்னிட்டு திருப்பூரில்

# துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் மாலை அணிவித்து மரியாதை!

## மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் எம்.எல்.ஏ., அறிவிப்பு!



திருப்பூர், டிச.19- இனமான பேராசிரியரின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு திருப்பூர் ரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் திருவுருவச் சிலைகளுக்கு முன்பு வைக்கப்பட்டுள்ள இனமான பேராசிரியர் திருவுருவப் படத்திற்கு கழக இளைஞர் அணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார் என்று மாவட்டச் செயலாளர் க.செல்வராஜ் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர்களது அறிக்கை வருமாறு:-

கழக இளைஞர் அணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், இன்று 19.12..2024 வியாழக்கிழமை காலை 10.00 மணியளவில் திருப்பூர் இனமான பேராசிரியரின் 102வது பிறந்த நாளை முன்னிட்டு ரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா ஆகியோரின் திருவுருவச்சிலைகளுக்கு முன்பு வைக்கப்பட்டுள்ள இனமான பேராசிரியர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.

காலை 10.15 மணியளவில் திருப்பூர், கருவம்பாளையம் பகுதி, ஏ.பி.டி. சாலை, சூர்யா நகரில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு திருப்பூர் தெற்கு தொகுதி கலைஞர் நூலகத்தை திறந்து வைக்கிறார்.

காலை 10.30 மணியளவில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவல வளாகத்தில் திருப்பூர் மாவட்டத்தில் செயல்படுத்தப்படும் அரசு திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்கிறார்.

மதியம் 1.00 மணியளவில் திருப்பூர் அவிநாசி சாலையில் அமைந்துள்ள பப்பீஸ் ஹோட்டலில் திருப்பூர் வடக்கு மாவட்ட சார்பு அணிகளின் நிர்வாகிகள் சந்திக்கிறார்.

இந்நிகழ்ச்சிகளில் மாநகர கழக செயலாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக, வட்டக் கழக செயலாளர்கள், அனைத்து உள்ளாட்சிப் பிரதிநிதிகள், அனைத்து அணிகளின் தலைவர்கள், அமைப்பாளர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள், மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக நிர்வாகிகள், பி.எல்.ஏ.2 நிர்வாகிகள், உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் பங்கேற்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வடக்கு மாவட்டச் செயலாளர், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர் க.செல்வராஜ் தனது அறிக்கையில் கூறியுள்ளார்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, ஈரோடு மாவட்டம் அந்தியூர் சட்டமன்றத் தொகுதி அந்தியூர் பேரூராட்சியில் K290 அந்தியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தின் கீழ் கெட்டி சமுத்திரம் ஊராட்சி ஜே.ஜே. பகுதியில் புதிய நியாய விலைக் கடையினை அந்தியூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஜி.வெங்கடாசலம் திறந்து வைத்தார். நிகழ்வில் பி.டி.எஸ்.ஆர், கார்த்தி சி.எஸ்.ஆர், சண்முகம் அந்தியூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க செயலாளர் சீனிவாசன், சிபிஎம் தாலுக்கா செயலாளர் முருகேசன், மாரிமுத்து, பழனிச்சாமி, ஹரிஹரன், கேசவன், ஆனந்த்,செல்வன், சுப்பிரமணியம் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



திண்டிவனம் சட்டமன்றத் தொகுதிதிண்டிவனத்தில் மழை வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொது மக்களுக்கு விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் ப. சேகர், நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன் ஆகியோர் அரசு நிவாரண உதவிகளை வழங்கினர். உடன்மாவட்ட பொருளாளர் ரமணன், நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன் உள்ளிட்ட தி.மு.க. நிர்வாகிகள் உள்ளனர்.



துணை முதலமைச்சரின் பிறந்தநாளை முன்னிட்டு தருமபுரி மேற்கு மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் திருமதி.கவிதாமோகன்தாஸ் ஏற்பாட்டில் தொட்டம்பட்டி ஊராட்சியில் 300 ஏழை எளியோருக்கு வேட்டி,சேலை மற்றும் உணவினை தருமபுரி மேற்கு மாவட்ட கழக செயலாளர் முனைவர்.பி. பழனியப்பன் வழங்கினார்.உடன் தொகுதி பொருப்பாளர் செல்லதுரை,கிழக்கு ஒன்றிய செயலாளர் செங்கண்ணன், மாவட்ட மகளிர் அணி துணை அமைப்பாளர்கள் இரத்தினம்,கங்கா மற்றும் கழகத்தினர்.

### கூட்டுறவு மேலாண்மை பயிற்சி நிலையங்களின்

# உட்கட்டமைப்பை மேம்படுத்த ஒன்றிய அரசு மேற்கொண்ட நடவடிக்கை என்ன?

## மக்களவையில் - கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவர் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!



புதுடெல்லி, டிச.19- கூட்டுறவுக் கல்வி மற்றும் அதன் மேலாண்மைப் பயிற்சி நிலையங்களை வலுப்படுத்தவும், பயிற்சி நிலையங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்தவும், கிராமப்புற கூட்டுறவு வங்கிகளின் வளர்ச்சித் திட்டங்களுக்கான வருவாய்த் தேவையை ஈடுசெய்யவும் ஒன்றிய அரசு வகுத்துள்ள திட்டங்கள் என்ன என்பன போன்ற பல்வேறு கேள்விகளை ஒன்றிய கூட்டுறவுத்துறை அமைச்சகத்திடம் மக்களவையில் கழக நாடாளுமன்றக் குழுத் துணைத் தலைவரும் மத்திய சென்னை நாடாளுமன்ற உறுப்பினருமான தயாநிதி மாறன் வினவினார்.

அதன் விவரங்கள் பின்வருமாறு:

கூட்டுறவு மேலாண்மை நிலையங்களின் உட்கட்டமைப்பை மேம்படுத்த தற்போது நடைமுறையில் உள்ள திட்டங்கள் மற்றும் முன்னெடுக்க உள்ள திட்டங்களின் விவரங்களைத் தெரியப்படுத்தவும் எனக் கேள்வி எழுப்பினார் . கூட்டுறவுக் கல்வி மற்றும் அதன் மேலாண்மைப் பயிற்சி நிலையங்களை வலுப்படுத்த மாநில அரசுகளுக்கு உதவும் வகையில் ஒன்றிய கூட்டுறவுத்துறை அமைச்சகம் வகுத்துள்ள திட்டங்கள் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

மக்களுக்கான கடன் தொகையை குறைந்த வட்டியில் வழங்வகுதை முக்கிய நோக்கமாக கொண்டுள்ள கிராமப்புற கூட்டுறவு வங்கிகள், மக்களின் வளர்ச்சித் திட்டங்களுக்கான வருவாயினையும் ஈடுசெய்யும் வகையில் ஒன்றிய அரசு வகுத்துள்ள திட்டம் என்ன எனக் கேள்வி எழுப்பினார்.

### மதுரையிலும் - எழும்பூரிலும் பல அடுக்கு கார் பார்க்கிங் வசதி:

# தமிழ்நாட்டின் 77 ரயில் நிலையங்களை தரம் உயர்த்த ரயில்வே நிர்வாகம் திட்டம்!

## மாநிலங்களவையில் - டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்விக்கு - ரயில்வே அமைச்சர் பதில்!



புதுடெல்லி, டிச. 19- தமிழகத்தில் உள்ள ரயில் நிலையங்களை தரம் உயர்த்தும் திட்டம் இருக்கிறதா? அதற்காக ஒதுக்கப்பட்ட நிதி எவ்வளவு? அந்த வேலைகள் எப்போது முடியும் என்று மாநிலங்களவையில் தி.மு.அக். எம்.பி., டாக்டர் கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பி இருந்தார்.

இதற்கு ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அளித்த பதில்:

இந்தியாவில் உள்ள ரயில் நிலையங்களில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் உட்பட அவற்றின் தரத்தை மேம்படுத்த அம்ரித் பாரத் ஸ்டேஷன் திட்டத்தை ஒன்றிய அரசு அமல்படுத்தியுள்ளது. இத்திட்டத்தின்படி, ரயில் நிலையத்திற்கு வரும் பாதை, சாலைகளை மேம்படுத்துவது,, ரயில் நிலையங்களில் வைஃபை, கழிப்பறை, ஓய்வறை வசதிகள் செய்து தருவது, பிளட்பாரங்களின் தரைப்பரப்பை செம்மைப்படுத்துவது, புதிய கட்டடங்கள் கட்டுவது ஆகியவை செயல்படுத்தப்படுகின்றன.

இத்திட்டத்தை அமல்படுத்த இந்தியாவில் 1337 ரயில் நிலையங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் அம்பாசமுத்திரம், அரக்கோணம், அரியலூர், ஆவடி, சின்ன சேலம், சிதம்பரம், ஈரோடு, ஜோலார்பேட்டை, கோவை, காரைக்குடி, மன்னார்குடி, திருநெல்வேலி, தஞ்சாவூர், திருவாரூர், தாம்பரம், எழும்பூர் உள்ளிட்ட 77 ரயில் நிலையங்கள் தேர்வு செய்யப்பட்டு, அதில் 71 ரயில் நிலையப் பணிகளுக்கான வேலை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மதுரை மற்றும் எழும்பூரில் ரயில் நிலையத்தில் பல அடுக்கு கார் பார்க்கிங் வசதி, ராமேஸ்வரத்தில் நுழைவு வாயில்கள் மற்றும் பார்சல் அலுவலகம் புதுப்பிப்பு, எழும்பூரில் புதிய பார்சல் அலுவலகம், பல அடுக்கு கார் பார்க்கிங், காரைக்குடியில் புதிய பயணிகள் காத்திருப்பு அறை, லிஃப்ட் வசதி, அரியலூர் மற்றும் மன்னார்குடியில் புதிய நுழைவு வாயில்கள் அமைத்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின் கீழ் நடைபெற்று வருகின்றன.

பயணிகள் மற்றும் ரயில்களின் பாதுகாப்பை மனதில் வைத்தும் இயற்கை சீற்றங்களின் இடையூறுக்கு மத்தியிலும் இந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே குறிப்பிட்ட காலக்கெடு எதுவும் இந்த தொடர்பணிகளுக்கு விதிக்க முடியாது. ஆனாலும் பணிகளை விரைவுபடுத்த ரயில்வே நிர்வாகம் நடவடிக்கை எடுத்து வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள ரயில் நிலையங்கள் தெற்கு ரயில்வே மற்றும் தென் மேற்கு ரயில்வே மண்டலங்களின் கீழ் வருகின்றன. அம்ரித் பாரத் ஸ்டேஷன் திட்டத்திற்காக இந்த இரண்டு மண்டலங்களுக்கும் சேர்த்து கடந்த நான்கு ஆண்டுகளில் 4,313 கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் இதுவரை 2,506 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் தெரிவித்தார்.



கழக இளைஞரணி செயலாளரும், துணை முதலமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் என்.நல்லசிவம் ஆலோசனைப்படி 107பவானிசாகர் சட்டமன்ற தொகுதி தகவல் தொழில்நுட்ப அணி சார்பில் சத்தியமங்கலம் தெற்கு ஒன்றியத்தில் ஒன்றிய கழகச் செயலாளரும், ஊராட்சி ஒன்றிய குழு பெருந்தலைவருமான கே.சி.பி. இளங்கோ தலைமையில் மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ச.செந்தில்குமார் முன்னிலையில் துணை ஒருங்கிணைப்பாளர் டி.பிரபு ஏற்பாட்டில் உக்கரம் ஊராட்சி மற்றும் காளிகுலம் அரசு நடுநிலைப் பள்ளி மாணவ மாணவிகளுக்கு தேவையான கல்வி மற்றும் விளையாட்டு உபகரணங்கள், இனிப்புகள் வழங்கப்பட்டது. நிகழ்வில் பவானிசாகர் சட்டமன்ற தொகுதி மற்றும் ஒன்றிய ஒருங்கிணைப்பாளர்கள் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதி,ஜெயங்கொண்டம் நகராட்சி, திருச்சி சிதம்பரம் சாலையில்,அதிகளவு கனமழையால் பெருக்கெடுத்து ஓடும் மழைநீரை வெளியேற்றும் பணியை துரிதப்படுத்தி,அரியலூர் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் திருமதி எம்.விஜயலெட்சுமி,சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க.கண்ணன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். இதில் உடையார்பாளையம் வருவாய் கோட்டாட்சியர் ஆர்.ஷீஜா,வட்டாட்சியர் சம்பத், நகராட்சி ஆணையர் அசோக்குமார், ஆண்டிமடம் தெற்கு ஒன்றிய கழக செயலாளர் ஆர்.கலியபெருமாள்,நகராட்சி பொறியாளர் ராஜகோபாலன்,பணி மேற்பார்வையாளர் பூபதி மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.